செய்தி வெளியீடு எண். 72 நாள்: 01.02.2018

## மாவட்ட அளவிலான வளைகோல் பந்து லீக் போட்டி நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்

திருவள்ளூர் மாவட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒருங்கிணைந்த விளையாட்டரங்கத்தில் 2017-2018-ம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான வளைகோல் பந்து லீக் போட்டி 04.02.2018 அன்று காலை 8.00 மணியளவில் தொடங்கி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் கலந்துக்கொள்ள வயது வரம்பு இல்லை. போட்டியில் கலந்து கொள்ளும் வீரர், வீராங்கனைகள் 04.02.2018 அன்று காலை 7.00 மணியளவில் நுழைவு படிவத்தினை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெற்று முதல் இரண்டு இடங்களை பெறும் அணிகளுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழுங்கப்படும் மாவட்ட அளவிலான போட்டியில் முதல் இடம் பெறும் அணி மண்டல அளவிலான போட்டியிலும், மாநில அளவிலான போட்டியிலும் கலந்துக்கொள்ளலாம். மண்டல அளவிலான போட்டிகள் பிப்ரவரி மாதத்திலும், மாநில அளவிலான போட்டிகள் பிப்ரவரி மாத இறுதியிலும் நடைபெறவுள்ளது. இப்போட்டினை பற்றிய விவரங்கள் அறிய மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை (செல்-7401703482) தொடர்பு கொள்ளவும் மேற்கண்ட போட்டியில் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**